**வாக்குமூலம்**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி**
**சி.சி.எண்.249/17**
**வழக்கு சாட்சி – அ.சா.6**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சேகர் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | சின்னத்துரை | தொழில் | விவசாய கூலி |
| கிராமம் | உப்புக்கோட்டை | சமயம் | |
| தாலுக்கா | போடி | வயது | 61 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.02.24

**( எதிரி ஆஜர். )**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

என்னிடம் காண்பிக்கப்படும் பார்வைமகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். தேதி, மாதம் தற்போது ஞாபகம் இல்லை. சுமார் 6 வருடத்திற்குமுன்பு காலை 9மணிக்கு உப்புக்கோட்டை பேருந்து நிறுத்தத்தில் வைத்து கலவரம் நடந்ததாக கூறி என்னிடமும், யோகேஷ்குமார் என்பவரிடமும் கையெழுத்து வாங்கினார்கள். பார்வைமகஜரில் உள்ள 2வது கையெழுத்து மட்டும் அசாஆ 2. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பு சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக பாவித்து நீதிமன்ற அனுமதிக்கோரப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பு குறுக்கு விசாரணை.**

கடந்த 9.2.17 அன்று காலை 9மணிக்கு குற்றஎண்.65/17 வழக்கின் சம்பவ இடத்திற்கு நான் வந்ததாகவும், அப்போது போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், அதில் நான் சாட்சியாக கையெழுத்துபோட கேட்டுகொண்டதாகவும், அதில் நான் சாட்சியாக கையெழுத்து செய்தேன் என்றும், போலிச் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கையெழுத்து செய்த பேப்பரில் என்ன எழுதயிருந்தது என்ற தெரியாது என்றால் சரிதான். போலிசார் கேட்டதன் பேரில் கையெழுத்து செய்தேன் என்றால்

சரிதான். அன்றையதினம் யார் யாருக்கு இடையில் சண்டை நடந்தது என்று தெரியாது என்றால் சரிதான். கலவரம் நடந்தது போலிசார் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.